1995 நவம்பர் 8]

எளியவர்கள் ஆக்கிரமிப்பு செய்தால் அகற்றப்பட மாட்டாது என்றும் உறுதிமொழியை இப்போதும் கொடுக்கவில்லை. எப்போதும் கொடுக்கவில்லை, என்றும் கொடுக்கவில்லை, என்றும் கொடுக்கப் போவதும் இல்லை. ஆனால் அது ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தினுடைய தன்மையைப் பொறுத்து இருக்கிறது. வாய்க்கால் புறம்போக்கு, குளம் புறம்போக்கு இப்படி என்றால் நிச்சயமாக யாராக இருந்தாலும் அகற்றப்படுவார்கள். அதுமட்டுமல்ல, ஏழை எளியவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தால், அங்கே குடிசை போட்டுவிடுகிறார்கள். அங்கே தண்ணீர் வரும்போது, அந்தக் குடிசைகள் பாதிக்கப்படுகின்றன. அதனால் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அகற்றப்படுவார்கள். மற்றும் ஒன்று, சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவைப் போட்டு, அதைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவைப் போட்டு அதை பார்க்கச் சொன்னால்—நான் சட்டமன்ற உறுப்பினர்களைக் குறைத்து மதிப்பிடுவதாக நீங்கள் கருதக் கூடாது—நீங்கள் உங்களுடைய தொகுதியிலே ஓட்டு வாங்க வேண்டுமென்று, பொது மக்களுடைய எண்ணங்களுக்கு ஏற்ப, எப்படியாவது பட்டா கொடுத்தால் போதும் என்ற உணர்வு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், என்னையும் சேர்த்து, இருக்கத்தான் செய்யும். அதனால், நடைமுறையில் வருவாய்த் துறை அதிகாரிகள் பார்த்து, சிபாரிசு செய்யும்போது, அதிலே ஆக்கிரமிப்பு எதுவாக இருந்தாலும், பொது நோக்கோடு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

42—

நில ஆக்கிரமிப்புகளைத் திரும்பப்பெற நடவடிக்கை

16082*—திரு. கே.பி. ராஜு:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, சி.பி.எம். கலைக் கல்லூரி அரசு புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு திரும்பப் பெற நடவடிக்கை எடுக்குமா?

[1995 நவம்பர் 8

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த ஆக்கிரமிப்புகளைத் தற்போது கல்லூரி நிர்வாகம் கைவிட்டுவிட்டது.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில், கோவைப்புதூர் அருகிலே சி.பி.எம். கல்லூரி என்று ஒரு கல்லூரி இருக்கிறது. 1975-ஆம் ஆண்டு, அப்போது இருந்த ஆட்சியாளர்கள் காலத்தில், ஒரே இரவில் சுமார் 45, 50, 60 விவசாயிகளுடைய நிலங்களை, கால் ஏக்கர், அரை ஏக்கர், முக்கால் ஏக்கர் நிலங்களை எல்லாம் அபகரித்து, இந்தத் தனியார் கல்லூரியானது வளைத்துப் போட்டுக் கொண்டு, தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரி அரசினுடைய கட்டுப்பாட்டிலும் இல்லை. ஆகவே அந்த நிலங்களை மீட்டு, கால் ஏக்கர், அரை ஏக்கர், முக்கால் ஏக்கர் என்று வைத்திருந்த அந்த ஏழை எளிய மக்களுக்கு மீண்டும் அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, தனியார் கல்லூரிக்கு அந்த நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் 16.10 எக்டேர் அல்லது 39.78 ஏக்கர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு 18 ஆண்டுகளாகியும், அவர்கள் இன்றைக்குக் கட்டிடம் கட்டிப் பயன்படுத்துவது 0.75 ஏக்கர்தான். எஞ்சியுள்ள பகுதிகளில் மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அதிலே 3.9 ஏக்கர் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். 35 ஏக்கர் இன்றைக்கு உபயோகரமாக இல்லை. அப்படி உபயோகரமாக இல்லாத நிலத்தை எடுக்க வேண்டுமென்று அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அவர்கள் தவறாகப் பயன்படுத்தினார்கள் என்பதற்காக நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அதற்காக நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் உயர் நீதிமன்றத்திலே வழக்குப் போட்டு தடையாணை வாங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிர்வாகமானது அரசுக்குக் கட்டுப்படாமல் நீதிமன்றத்தினுடைய

1995 நவம்பர் 8]

துணையை வைத்துக்கொண்டு ஏழைகளுடைய நிலங்களை அபகரித்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிமன்றத்திற்கு முறையீடு செய்து அல்லது வேண்டுகோள் விடுத்து அந்தத் தடையாணையை ரத்து செய்து உடனடியாக அந்த ஏழை விவசாயிகளுக்கு மீண்டும் நிலம் கிடைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரோ அல்லது நிறுவனமோ அரசுக்கு விரோதமாக நீதிமன்றம் போவதில் எந்தத் தடையும் இல்லை. நீதிமன்றத்திற்குப் போவதற்கு எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. எனவே அரசுக்கு விரோதமாக என்று நாம் எடுத்துக் கொள்வதற்கு இல்லை. அவர்களுக்கு நீதி வேண்டுமென்று போய் இருக்கிறார்கள். அதேநேரத்தில் அவர்கள் நிலத்தை பல ஆண்டு காலமாக பயன்படுத்தாமல் இருப்பதால் அரசு பக்கம் தான் நீதி இருக்கிறது என்பதால் அதை நாங்கள் எடுத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். அதை மீறி அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று விட்டார்கள். தடையாணை வாங்கி இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தடையை நீக்க வேண்டுமென்று சொல்லி, தடையை நீக்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, திரு. கா. சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

43—

கொல்லிமலை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம்

**9984*—திரு. கா. சின்னசாமி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொல்லிமலை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?